# சித்தர் நெறி

மெய்ஞ்ஞானக்கொடி

மெய்ஞ்ஞானக்கொடி

சீவநெறி => சிவநெறி => சைவநெறி => மெய்யான இந்துமதம்

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியவை



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

ஆடி மாத வெளியீடு (July-Aug 2013)
மெய்யான இந்துமத ஆண்டு 43,73,114

**இந்து மறுமலர்ச்சி இயக்கம் (இ.ம.இ. I.M.I.)**
பற்றிய
**விளக்கக் கட்டுரைகள்**

காணிக்கை ரூ.5/-

# தொகுப்பாளரின் உரை

சென்ற இதழில் கடவுளை வழிபடுவோர் கழக அறிக்கை வெளியிட்டோம். இந்த இதழில் இந்து மறுமலர்ச்சி இயக்கம் பற்றிய விளக்கக் கட்டுரைகளில் ஒரு சிலவற்றை குருதேவரின் எழுத்துக்களிலிருந்து வெளியிடுகின்றோம். இலைமறை காயாகவே சில நூற்றாண்டுகளாக இயங்கி வரும் இந்து மறுமலர்ச்சி இயக்கம் பற்றி அனைவரும் அறிந்து கொள்ளுவதற்காக இவை வெளியிடப் படுகின்றன.

‘உலகத்தில் மானுடராகப் பிறந்த ஒவ்வொருவரும் இந்துவே’ என்ற கருத்தினை குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் பல இடங்களில் வெளிப்படுத்தி உள்ளார். இந்த இந்துக்கள் மறுமலர்ச்சி பெற்று விட்டால் போதும், உலகெங்கும் அமைதி, நிம்மதி, இனிமை, உண்மைப் பற்று, வாய்மைப் பாசம், நிறைவு, ஒற்றுமை, சகோதரத்துவம், ஆன்மநேயம், பொதுவுடமை, ... முதலியவை தழைத்தோங்கிடும். இந்தக் கட்டுரைகள் தேவையான விளக்கங்களை வழங்கிடும்.

# உள்ளுறை


1. சித்தர்கள் வரலாறும், இந்து மறுமலர்ச்சி இயக்கமும் - 1982இல் அச்சிடப்பட்ட சிறு நூல்
2. இந்து மத மறுமலர்ச்சியே இந்தியாவின் செழுச்சி - முன்னுரை
3. இந்து மறுமலர்ச்சி இயக்க விளக்கச் சுருக்கம்
4. இந்து மறுமலர்ச்சி இயக்க வீர முழக்கங்கள்
5. அரச பாரம்பரியம் - சித்தர்கள் தரும் வரலாற்றுச் செய்திகள்
6. இயக்க வளர்ச்சி நிலை - குருதேவரின் விளக்கம்
7. இந்துமத நிறுவனங்களைத் தோற்றுவித்திட....
8. குருதேவரின் 49வது ஆண்டுப் பிறந்த நாள் செய்தி

# சித்தர்கள் வரலாறும், இந்து மறுமலர்ச்சி இயக்கமும்

பதினெண்சித்தர்கள் வழங்கிய அருளார்ந்த அறிவுக் கொடையே சித்தர் நெறி. அது காலப்போக்கில் பல்வேறு சேர்க்கைகளையும் பெற்று இன்றைய இந்து மதமாக விளங்குகிறது. எனவே, சித்தர் நெறியை அறிமுகம் செய்வது, பதினெண்சித்தர்களையே அறிமுகம் செய்வதாகும். பதினெண்சித்தர்களை அறிமுகம் செய்வது இன்றைய நிலையில் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை அறிமுகம் செய்வதாகும்.

'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' என்ற ஒன்று கி.பி.1772இல் இருந்து இரண்டு நூற்றுண்டுக் கால அளவுக்கு மேல் செயல்பட்டும் அதனுடைய கொள்கைகளும், குறிக்கோள்களும் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை என்பதால்; அதனை வரலாற்றுப் பின்னணியோடு கலை, இலக்கியத் துணையோடு நடைமுறைப்படுத்தும் முயற்சியின் ஓர் அங்கமே இக் கட்டுரை. இந்த மண்ணுலகம் தோன்றி 500 கோடி ஆண்டுகள் ஆகின்றன என்று முறையான வரலாற்றை எழுதித் தரும் பதினெண்சித்தர்கள், இம்மண்ணுலகம் தோன்றுவதற்கு முன்பே விண்வெளியில் உள்ள அண்டங்களிலே தோன்றியவர்களாவார்கள். இவர்களின் பெருமுயற்சியால்தான், இம்மண்ணுலகில் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு முதலிய பல வாழ்வுகள் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்திருக்கின்றன. இன்றைக்கு மேற்கூறிய வாழ்வுகள் எல்லாம் சிதைந்து சீரழிந்து கிடக்கின்றன. இவற்றைச் செப்பனிடுவதற்காகவே மீண்டும் பதினெண்சித்தர்களின் அருளார்ந்த அறிவுக் கொடையை அறிமுகப்படுத்துகிறோம்.

பதினெண்சித்தர்கள்[1] பற்றிய வரலாற்று நூல்கள் பல தொகுதிகளாக எழுதப் பட்டிருக்கின்றன என்பதால் விரிவஞ்சி சுருக்கமான விளக்கம்

---

[1] சித்தர்கள் = சித்துக்களை அத்தவர்கள்
= சித்துக்களை வென்று முடித்தவர்கள்

மட்டும் இங்கு தரப்படுகிறது. இம் மண்ணுலகில் பிறந்த உயிரினங்களில் தலைமையான உயிரினமே மனித இனம். இந்த மணீசர்[2]களோடு பதினெண்சித்தர்கள் உறவு கொண்டு உருவாக்கிய விந்துவழி வாரிசுகள் நவகோடி சித்தர்கள், நவநாத சித்தர்கள், ஞான சித்தர்கள், தவ சித்தர்கள், ஓம சித்தர்கள், ஓக சித்தர்கள், யாக சித்தர்கள், யக்ஞ சித்தர்கள், ...... என்று 48 வகைப்படுகிறார்கள். இவர்கள் அல்லாமல் பலவகைப் பட்ட குருவழிச் சித்தர்களும் உருவாக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களின் அடிப்படையில் 64 ஆய கலைகள், 48 அருட் கலைகள், 9 கடவுட் கலைகள், 9 தெய்வீகக் கலைகள், 9 நோய்க் கலைகள், 9 பேய்க் கலைகள், 9 தேய்கலைகள் என்று எண்ணற்ற கலைகளும், பலவகைப் பட்ட சாத்திறங்களும், தோத்திறங்களும், மந்திறங்களும், வழிபாட்டு முறைகளும் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இவற்றின் செயலகங்களாக ஆதியில் 108 திருப்பதிகள், 243 சத்தி பீடங்கள், 1008 சிவாலயங்கள் படைக்கப் பட்டன. கால வேகத்தாலும், கருத்து வளர்ச்சியாலும், தேவையாலும் 48 வகைப்பட்ட வழிபாட்டு நிலையங்கள் தோற்றுவிக்கப் பட்டன.

இவை காலந்தோறும் தோன்றிய அருளாளர்களால் நூற்றுக்கும் மேற்பட்ட வகைகளாக வளர்ந்து விட்டன. அருளாளர்களும் காலங்கள் தோறும் தங்கள் தங்களுடைய பத்திநிலைகள், சத்திநிலைகள், சித்திநிலைகள், முத்திநிலைகள் முதலியவைகளுக்கேற்பத் தங்களுடைய அநுபவங்களைப் பத்தி இலக்கியங்களாகப்[3] படைத்திருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் இந்தியத் துணைக் கண்டத்திற்குள் இருக்கின்ற இந்து மதத்தில்தான் இடையீடு இல்லாத முறையான, தொடர்ந்த வளர்ச்சி நிலைகளில் காணமுடிகின்றது. எனவேதான், உலக மதங்கள் அனைத்தையும் இந்து மதத்தின் அடிப்படையில் விளங்கிக் கொள்ள முடிகிறது. அதாவது, பதினெண்சித்தர்கள் உருவாக்கிய தத்துவங்களும், வழிபாட்டு முறைகளும், வழிபாட்டு நிலையங்களும்தான் உலக மதங்கள் அனைத்தையும் அந்தந்த நாட்டுச் சூழல்களுக்கும், தேவைகளுக்கும் ஏற்பத் தோற்றுவித்திருக்கின்றன

---

[2] ஈசன் = தலைவன்; மண்ணின் தலைவன் = மணீசன் [மண்+ஈசன்]

[3] Religious Literature

என்பதே உண்மையாகும். எனவே, சித்தர் நெறி அறிமுகத்தின் மூலம் உலக மதங்களின் இணைப்பும், உலக ஆன்மநேய ஒருமைப்பாடும், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயமும் உருவாக்கப் பட்டிடும். இதன் மூலம், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கையும், குறிக்கோளும் நிறைவேறிடும். அதாவது, உலகம் தழுவிய முறையில் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு முதலிய அனைத்திலும் ஒற்றுமை, சமாதானம், மகிழ்வு, நிறைவு, நிம்மதி, அமைதி, கனிவு, அன்பு, பற்று, பாசம், தோழமை, நட்பு, இனிமைமிகு நல்லுறவு முதலியவைகள் தழைத்தோங்கிடும். எனவே, சித்தர் நெறி அறிமுகம் வரலாற்றுப் பின்னணியில் சுருக்க விளக்கமாக உருவாகிறது.

குமரிக் கண்டத்தில் பதினெண்சித்தர்கள் பஃறுளி ஆற்றங்கரையில் தாங்கள் உருவாக்கிய சமுதாயத் தத்துவத்தின்[4] முதிர்ச்சியான அரசியல் தத்துவத்தைச்[5] செயலுக்குக் கொண்டு வந்து இம்மண்ணுலகின் முதல் அரசு[6] உருவாக்கினுர்கள். இந்த அரசு, இம்மண்ணுலகிற்கே தொன்மையான அரசு அல்லது பழமையான அரசு என்ற பொருளில் ‘பண்டைய அரசு’ என்று குறிக்கப் பட்டது. இதுவே பாண்டிய அரசு ஆயிற்று.

பாண்டிய அரசின் அரியணையில் சித்தர் கருவூரர் அமர்ந்த காலத்தில் தமது மகளான சோழமாதேவிக்குக்[7] குமரியாற்றங்கரையையும், அதன் சுற்று வட்டார நாடுகளையும் பிரித்துச் சோழமாதேவியின் நாடு என்னும் பொருளில் ‘சோழ நாடு’ ஒன்றை உருவாக்கினுர். காலப்போக்கில் இவ்விரு பேரரசுகளையும் சேர்ந்த அரச குடும்பத்தவர்கள், சேரர்கள்[8]

---

[4] Social Philosophy

[5] Political Philosophy

[6] The first government on this earth was founded on the bank of the river ‘Pahruli’ by the Pathinen Siddhars that is called ‘The Pandian Kingdom. பண்டைய அரசு = பாண்டிய அரசு = The word ‘pandaiya’ means ancient; that is coined as ‘Pandian’

[7] சோழியம்மன்

[8] சித்தர்களால் உருவாக்கப்பட்ட அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகத்தான் சேரர் என்ற பெயர்ச் சொல் உருவாக்கப் பட்டது

என்று உருவாக்கப்பட்டு, மலையும் மலை சார்ந்த இடங்களையும்[9] ஆளுவதற்குரியவர்களாக நியமிக்கப் பட்டார்கள். இது பற்றிய முழு விவரங்களும் பதினெண்சித்தர்களுடைய 'அரச பாரம்பரியம்'[10] என்ற நூலில் உள்ளன. இதேபோல் சமய வரலாறு 'குருபாரம்பரியம்'[11] என்ற பெயரிலும்; இலக்கிய வரலாறு 'இலக்கிய பாரம்பரியம்'[12] என்ற பெயரிலும் உள்ளன. இப்படிப் பதினெண்சித்தர்கள் மிகச் சிறந்த வரலாற்றுப் பேராசிரியர்களாக விளங்குகிறார்கள்.

பதினெண்சித்தர்கள் இம்மண்ணுலகின் ஆயுளை 48 பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றி நிறைவு பெறுவதுடன் இணைத்துள்ளார்கள். முதலில் இராசிவட்டக் கருவூரார்கள் என்ற 12 பேர்களும், பிறகு முறையே விண்மீன் வட்டத்திற்கு 27 பேர்களும், கோள் வட்டத்திற்கு 9 பேர்களும் தோன்றுவார்கள் என்று குறித்துள்ளார்கள். விரிவஞ்சி இதன் சுருக்கத்தை மட்டும் இங்கு தருகிறோம். இதுகாறும் தோன்றியவர்களில் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும் குறிப்பிடத் தக்கவர்கள்.

அமராவதியாற்றங்கரைக் கருவூரார் சமுதாயப் புரட்சியின்[13] மூலம் அனைத்தையும் சாதித்து விட முடியும் என நம்பினார். இவரது காலத்தில் குமரிக் கண்டத்திலிருந்த பனிமூடிய தென் இமயமலையையும், தென் வேங்கட மலையையும் அடிப்படையாகக் கொண்ட சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய வரலாறுகள் முறையாகவும் முழுமையாகவும் எழுதப்பட்டன. உலகம் முழுவதும் வாணிகத் தொடர்பு வைத்திருந்த தமிழினத்தின் பல்வேறு வகையான சமுதாய வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும் சரிக் கட்டுவதற்காக சமுதாய மாற்றப் பணி நிறைவேற்றப் பட்டது.

---

9 The Hills and the Hilly Places

10 Political History

11 The Religious History

12 The History of Language and Literature

13 Social Revolution

ஆனால், அது மூன்றாவது தமிழ்ச் சங்கத்தின் முடிவையே தந்தது. தமிழின விரோதிகளும், துரோகிகளும் தாக்கியதால் தமிழ்மொழி, இன நாட்டு உணர்வுக் கோட்டையாக விளங்கிய மதுரை மாநகரம் எரிக்கப் பட்டது. தமிழ்ப் புலவர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். தமிழ் ஏட்டுக் குவியல்கள் அழித்தொழிக்கப் பட்டன. இம் மாபெரும் அழிவுக்குப் பிறகு தமிழினத்தின் நல்வாழ்வுக்காகத் தமிழ் இலக்கியங்கள் 'சங்க கால இலக்கியங்கள்' என்ற பெயரில் தேடித் தொகுக்கப் பட்டன. இம் மாபெரும் பணியை நிகழ்த்திட்ட அமராவதியாற்றங்கரைக் கருவூரார் எண்ணற்ற நூல்களை எழுதினார். தக்காரைக் கொண்டு எண்ணற்ற நூல்களையும் எழுதுவித்தார். அவைதான் தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழினம் எனும் முக்கோணக் கோட்டையைப் பழுது பார்த்துச் செப்பனிட்டு நினைவுச் சின்னமாகப் பாதுகாத்துக் கொடுத்தன. இந்த நினைவுச் சின்னத்தில் உண்மையான தமிழின அரசு ஒன்று தோன்றி ஆட்சி செய்யச் செய்தவரே காவிரியாற்றங்கரைக் கருவூரார்.

பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் அரசியல் மாற்றத்தின்[14] மூலமே தமிழ்மொழி, இனம், நாடு என்ற முக்கோணக் கோட்டையில் அருளாட்சி அமைத்து உலகம் முழுதும் சித்தர் நெறியைத் தழைத்தோங்கச் செய்ய முடியும் என்று முடிவெடுத்தார். இந்த முடிவுக்காகப் பலமுறை உலகச் சுற்றுப்பயணம் செய்தார். கடலுள் மறைந்த குமரிக் கண்டத்தில் இருந்த அனைத்து விதமான கலைகளையும், அறிவியல்களையும்[15] மீண்டும் மானுட இன நலனுக்காக சிறுபள்ளிகள், பெரும்பள்ளிகள், பன்னாட்டுப் பன்னோக்குப் பல்கலைக் கழகம் முதலியவை அமைத்து வளர்த்தார். தமிழ்மொழியின் மூலமும், தமிழினத்தின் மூலமுமே தான் விரும்பும் உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை அமைக்க விரும்பினார். ஆனால், இவர் எந்த ஒரு மொழியுமே மற்ற மொழிகளை அடக்கி ஆள்வது தவறு என்று கண்டிக்கிறார். எனவேதான், இவர் இம்மண்ணுலகில் உள்ள பெரும்பாலான மானுட இனங்கள் தமிழினத்தில்

---

[14] Political Change

[15] Arts and Sciences

இருந்தே பிறந்தன என்றும்; இம்மண்ணுலகின் பல பகுதிகளில் இயற்கையாகத் தோன்றிய மானுட இனங்களும் தமிழினத்தின் கலப்பால் தெய்வீக நிலையைப் பெற்று விட்டன என்றும் குறிக்கின்றார். இதேபோல் இம்மண்ணுலகில் தோன்றிய பெரும்பாலான மொழிகள் அனைத்தும் தமிழ்மொழியில் இருந்தே பிறந்தன என்றும்; இம்மண்ணுலகின் பல பகுதிகளில் பேச்சு வழக்கில் இருந்த மொழிகளை எல்லாம் செம்மைப்படுத்தித் தமிழ்மொழியின் அடிப்படையிலேயே எழுத்துக்களையும், இலக்கண இலக்கியங்களையும் வளரச் செய்தார்கள் சித்தர்கள் என்றும் குறிக்கின்றார் இவர். இவற்றின் மூலம் மனிதகுல வாழ்வையே தமிழ்மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் உரியதாகவே ஆக்கிக் காட்டுகிறார் இவர்.

இவரது இக்கருத்து செயற்கை போல், கற்பனை போல், கனவு போல், புராணம் போல், இதிகாசம் போல் தோன்றுகின்றது என்பதை இவரே உணர்ந்திருக்கிறார். எனவேதான் இவர் உலக வரலாறு[16] மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் எழுதியிருக்கிறார். இன்னும் சொல்லப் போனால், இவரை ஒரு வரலாற்றுப் பேராசிரியர் அல்லது வரலாற்றுத் துறையின் தந்தை என்றே கூறலாம். இவர் பல நூறாயிரம் ஆண்டுகள் மிகத் தெளிவாக முறைப்படிக் காலக் கணக்கீட்டு அடிப்படையில்[17] வரலாறு எழுதியிருப்பது மிகச் சிறப்பாகும்.

இவர் இந்த உலகில் முதன்முதலில் தோன்றிய நிலம் குமரிக் கண்டம்[18] என்பதைக் கூறி அதிலிருந்தே, சமய வரலாறு[19] ‘குருபாரம்பரியம்’, அரசியல் வரலாறு[20] ‘அரச பாரம்பரியம்’, இலக்கிய வரலாறு[21] ‘இலக்கிய பாரம்பரியம்’ என்ற மூன்று பெரும் நூல்களைத் தொடர்ந்து எழுதும் பழக்கத்தைத் தோற்றுவித்தார். மேற்கூறிய மூன்று நூல்களும் சித்தர்களால்

---

[16] World History

[17] With a Chronological approach

[18] The Lost Lemuria

[19] Religious History

[20] Political History

[21] History of Language and Literature

அறிவுலகுக்குக் கொடுக்கப் பட்ட பரிசு அல்லது அரிய சாதனையாகும்[22]. இவர் இப்படி மூன்று பெரும் துறை சார்ந்த இலக்கியங்களை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் உருவாக்கியதோடு, ஏறத்தாழ எல்லாக் கலைகளையும், அறிவியல்களையும் பற்றி எல்லா நூல்களையும் எழுதியுள்ளார்.

இவரது முயற்சிகள் இவருக்கு முன்பு பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய அமராவதியாற்றங்கரைக் கருவூரரின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டதாகவே தெரிகிறது. இருந்த போதிலும், அமராவதியாற்றங்கரைக் கருவூரரின் சமுதாய மாற்றக் கொள்கையால், அரசியல் துரோகங்களையும், விரோதங்களையும், எதிர்ப்புகளையும், பகைகளையும், சூழ்ச்சிகளையும், அதிரடித் தாக்குதல்களையும், ... சமாளிக்கவே முடியாத மிகமிக மென்மையான, பண்பட்ட, நாகரீக நாடாகத்தான் தமிழ்நாடு உருவாயிற்று என்ற பேருண்மை இவரை எரிமலையெனக் குமுறச் செய்தது. எனவே, பூசைமணியையும், கற்பூரத் தட்டையும் ஏந்திய இவரது கைகள் போர்வாளும், வேலும், வில்லும் ஏந்தின. தவத்திலும், பூசையிலும் பழகிய இவர் தன்னை யானை ஏற்றம், குதிரையேற்றம், தேரோட்டுதல், மல்யுத்தம், படகு விடுதல், படை நடத்துதல் முதலிய கலைகளுக்கு உரியதாகப் பழக்கிக் கொண்டார். ஆழ்தவத்தில் அசைவற்றிருக்கும் விரல்களால் ஏட்டையும், எழுத்தாணியையும் எடுத்து இரவு பகலாக எண்ணற்ற நூல்களை எழுதிக் குவித்தார். துறவு மேற்கொண்ட இவர் மானுட இன நலனுக்காக உறவு மேற்கொண்டு நெடுங்காலம் வாழ்ந்து வாழையடி வாழையென கருவூர்த் தேவரை உருவாக்கினார்.

இமயம் முதல் குமரி வரை இருந்த தமிழின மக்கள் சமுதாயம்[23] பல்வேறு வகையான சாதி சமயப் பிரிவுகளால் வேற்றுமைகளையும், வேறுபாடுகளையும், மாறுபாடுகளையும், ஏற்ற இறக்கங்களையும், வெறுப்புகளையும், மறுப்புகளையும், போட்டி பொறாமைகளையும், சண்டை

---

[22] These three are the greatest contributions to the World of Knowledge by Siddhars

[23] The Tamils or the Indians = The Tamils are the aboriginates of the India

சச்சரவுகளையும் பெற்று எழுச்சி பெற முடியாத வீழ்ச்சிகளையும், உயர்ச்சி பெற முடியாத தாழ்ச்சிகளையும் பெற்றதைக் கண்டு அதன் மீட்சிக்காகத் திட்டமிட்டுச் செயலாற்றப் புறப்பட்ட மாவீரரே காவிரியாற்றங்கரைக் கருவூரர்.

இவர் தமிழ்ச் சமுதாயத்தைத் தொடர்ந்து சூழ்ச்சியால் வீழ்ச்சி நிலையில் வைத்திருக்கும் பேராற்றல் மிக்கவர்களை எதிர்த்துப் போராடுவதற்காக சமய மறுமலர்ச்சியை[24] உருவாக்கினர். அதற்காக கி.பி.785இலேயே மிகப் பெரிய முயற்சிகளைச் செய்து பொதிகை மலையில் இருந்து 'சத்தி இலிங்கம்', 'சிவ இலிங்கம்' என்ற இரண்டையும் மிகமிகப் பெரிய தொடர் முயற்சியால் நெடுந்தொலைவு எடுத்து வந்து முறையே தஞ்சாவூரிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலும் நிறுவினர். இவற்றிற்குரிய கோயில்களை இருநூறு ஆண்டுகள் கழித்தே, தான் உருவாக்கிய பிற்காலச் சோழப் பேரரசின் புகழ் மிக்க மாமன்னர்களைக் கொண்டு கட்டினர்.

இவர் மிகச் சிறந்த சிற்பி என்பதால் எண்ணற்ற கற்சிற்பங்களைச் செதுக்கியும், உலோகச் சிற்பங்களை வார்த்தும் பல அருள்வழங்கு நிலையங்களைக் கட்டினர்[25]. அக்கோயில்களைச் சாதனமாகக் கொண்டு, ஆங்காங்கே கிடைத்த அருட்தன்மையுடைய மனிதர்களைத் தேர்ந்தெடுத்து முறையான பயிற்சியின் மூலம் அவர்களை அருளாளர்களாக ஆக்கினர். அப்படி உருவான அருளாளர்களைக் கொண்டே சமய சமுதாய இருள்களை அகற்றினர். இதனால், பிற்காலச் சோழப் பேரரசு எனும் 'தெய்வீகப் பேரரசை'[26] உருவாக்கும் பெரும்படையினை அருட்படையாகத் திரட்டினர்.

அவரது முயற்சி நானூறு ஆண்டு காலம் வரலாற்றில் நின்றது. ஆனால் அவரை இன்றுகூட உணர்பவர் யாரும் இல்லை. இருப்பினும் அவர் தான் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் கோபுரத்தின் மடியிலேயே சிலை வடிவில் நிலைத்து நிற்கிறார். கடலலைகள் ஓய்ந்தாலும் கன்னித்

---

[24] The Religious Renaissance

[25] இவர் பற்றிய செய்திகள் இவர் வரலாற்று நூலில் தெளிவாக உள்ளன

[26] The Divine Kingdom; The Kingdom to safeguard the Siddharism or the Indhuism

தமிழினத்தைக் காக்க இவர் எடுத்த முயற்சிப் பேரலைகள் என்றைக்குமே ஓயா மாட்டாதவை. இவர் உருவாக்கிய அருள் வழங்கு நிலையங்கள் விலை மதிக்க முடியாத கலைக் கருவூலங்களாக மலையென நிமிர்ந்து நிற்கின்றன. இப் பேருண்மைகளை எல்லாம் உலகுக்கு அறிவிக்க முடியவில்லை என்ற ஏக்கத்தால் அலைகடல் துரும்பென அலைபவரே இன்றைய 'ஞாலகுரு' குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி.

இரண்டு நூற்றுண்டுகளுக்கு முன்னரே வாழையடி வாழையென சித்தர் கருவூரார் வழியில் வந்த சித்தர் ஏளனம்பட்டியார், 'தமிழகத்தையோ, இந்தியத் துணைக் கண்டத்தையோ வளப்படுத்தி வளர்க்கும் குறுகிய நோக்கில் பிறந்ததல்ல சித்தர் நெறி' என்ற பேருண்மையினை உலகுக்கு அறிவிக்க 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' உருவாக்கினார். அவர் 'இந்துமதம்' என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் 'இந்து' என்ற சொல்லையே பயன்படுத்தினார். இதற்குரிய காரண காரிய கருத்து விளக்கத்தை மிகத் தெளிவாக ஏட்டிலும், நாட்டிலும் நிலைநாட்டிச் சென்றுள்ளார். அவர் மத வெறியின்றி சித்தர்களின் சாதனைகளை சமுதாய நெறியாக மாற்றுவதற்காகவே பெரும்பாடு பட்டிட்டார். எனவேதான், மடங்களையோ, தனித்த கூட்டங்களையோ, அருளார்ந்த நிலையங்களையோ உருவாக்காமல் அருளுலக வாரிசுகளை உருவாக்கும் தத்துவ வித்துக்களைச் சாதி, சமய, இன, மொழி, நாடு கடந்து எங்கும் விதைத்துச் சென்றிட்டார்.

அவை எங்கும் சோலையாக இருப்பதால் அவற்றின் ஊடே சாலை அமைத்துச் செயல்படப் புறப்பட்டிருக்கிறார் 'ஞாலகுரு', 'ஞானகுரு', அரசயோகி, ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, இராசிவட்ட நிறைவுடையார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், சித்தர் கருவூரார். இவர் இன்றைய உலகியலுக்கேற்ப 'இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை' வெளிப்படையாக 'ஒரு பண்பாட்டுக் இயக்கம்'[27], 'ஒரு தெய்வீகக் கழகம்'[28],

---

[27] A Cultural Organization

[28] A Divine Society

'அருளாளர்களின் குழு'[29], 'உலகச் சமாதான இயக்கம்'[30], 'உலகத் தத்துவப் பேரவை'[31], 'உலகச் சித்தாந்திகளின் மையம்'[32], ... என்று அறிவித்து மானுட இனநல உரிமை[33]க்காகப் பணியாற்றப் புறப்பட்டிருக்கிறூர். எனவே, இந்த இயக்கத்துக்கு யாருமே எவ்விதச் சாதி சமய மொழி இன நாட்டுச் சாயம் பூச முற்படவே கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது!

இந்த இயக்கம் உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்காகப் பாடுபடக் கூடிய ஓர் ஒப்புயர்வற்ற தனித்த இயக்கம். அதாவது, இந்த இயக்கம் உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்குவதற்குரிய முயற்சிகளைக் கருவாக்கிக் கொண்டதேயாகும். இது தன்னுடைய கொள்கைகளையும், குறிக்கோளையும் அன்பு வழியில், அறவழியில், அருள்வழியில், அமைதி வழியில், சமாதான முறையில் நிறைவேற்றுவதிலேயே முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளது. இந்த நம்பிக்கையே என்றென்றும் இந்த இயக்கத்தின் சட்டமாகவும், திட்டமாகவும் இருந்திடும்.

எனவேதான், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் எவ்விதமான ஆரவாரமும் இன்றி, இந்தியத் துணைக் கண்டத்துள்ளும், அயல் நாடுகளிலும் நிறுவனக் கட்டமைப்புக்களைக் கட்டி வருகின்றூர். இவை அருளாளர்களின் பெயராலும், கலைகளின் பெயராலும், அறிவியல்களின் பெயராலும், நற்பணிகளின் பெயரிலும் வடிவமைப்புப் பெற்று வருகின்றன. இவை பேரருளின் திருவருள் திறத்தால் நிர்வாக ஒழுங்கமைப்புப் பெற்று வளர்ந்தோங்கும் நன்னாளில் உலகம் தழுவித் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு முதலிய அனைத்திலும் பற்று, பாசம், அன்பு, தோழமை, நட்பு, அமைதி,

---

[29] The Board of Mystics

[30] The Universal Peace Making Movement

[31] The International Philosophical Association

[32] The Centre of the International Theologists

[33] The Welfare of the Human Community Rights

**நிம்மதி, நிறைவு, ஒற்றுமை, சமாதானம் ... முதலிய இனிய பண்புகள் அனைத்தும் கனிந்து சுவை தரும் நற்காலம் தோன்றும். அக்காலத்தை விரைவில் உருவாக்குவதற்காகவே உழைக்க அனைவரையும் அழைக்கிறோம். அதாவது உலக மானுட நலம் செழித்தோங்க உழைக்க அனைவரையும் அழைக்கிறோம்.**

உணர்க! உணர்த்துக!
வருக! ஆதரவு தருக!

**இங்ஙனம்**

**இந்து மறுமலர்ச்சி இயக்கத்தவர்,**
**விருப்பாளர், ஆர்வலர், ஆதரவாளர்**

ஓம் திருச்சிற்றம்பலம்
தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

குருதேவர் சொல்ல இவ்வெளியீட்டை எழுதியவர்கள்:

1. அருள்மிகு அகிலாண்டேசுவரி சன்னிதானம், நீர்காத்த இலிங்கம் ஆதீனம், ஞானத்தரு, அருள்மழை, ஞானக்காட்சி வழங்கு நாயகம், அருளாட்சி ஓலைநாயகம், சித்தர்நெறிக் குரவர் சித்தரடியான் கு.சத்திவேலு B.E.,

2. அருள்மிகு ஆலவாய் கொற்றவை சன்னிதானம், அங்கயற்கண்ணி கோயில்வாழ் சுந்தரானந்தர் ஆதீனம், வண்டியூர் மாரியம்மன் பீடாதிபதி, உக்கிரப்படை கொண்டருளு தேவர் சொக்கேசர் ஆதீனம், வையையாற்றங்கரை அருட்சேனைத் தளபதி, அருட்பணி இரட்டையர், சித்தரடியான் இரா.தனசேகரன்

**//உண்மை நகல்//**
**//இதன் மூலம்: அச்சிட்ட புத்தகம்//**

# இந்து மத மறுமலர்ச்சியே இந்தியாவின் செழுச்சி

*அருளுபவர்*

"ஞாலகுரு"

பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,

ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி,

அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார்,

குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரர்

# முன்னுரை

## 1. உலகின் தோற்றம்

இந்த மண்ணுலகம் தோன்றி ஐந்நூறு (500 கோடி) கோடி ஆண்டுகள் ஆகின்றன. விண்வெளியில் உள்ள பல நூறுயிரக் கணக்கான சூரியன்களில் ஒன்று வெடித்துச் சிதறியதன் பகுதியே இந்த 'ஞாலம்'. {ஞா + ஈறு => ஞாயிறு + ஈறு = உருண்டை வடிவம் பெற்றதும்; உலவிக் கொண்டே இருப்பதுமானதே இந்த உலகம். இது விண்வெளியில் தொங்கிக் கொண்டிருக்கிறது = ஞாலம்}. இது ஆரம்பத்தில் நூறு கோடி [100 கோடி] ஆண்டுகள் 'நெருப்புக் கோளமாக' (Sphere of Fire) இருந்தது. அதிலிருந்து இரண்டாவது நிலை 'பனிக்கோளம்' [Sphere of Snow] ஏற்பட்டு நூறு கோடி ஆண்டுக்காலம் கழிந்தது. அதன்பிறகு தண்ணீர்க் கோளம் [Sphere of Water] உண்டாகி நூறுகோடி ஆண்டுக்காலம் கழிந்தது. அதன்பிறகு நிலம் தோன்றி முழுமை பெற [Sphere of Water and Soil] ஒரு நூறு கோடி ஆண்டுக்காலம் கழிந்தது. இப்படி ஏற்பட்ட நிலத்தில் 'உயிரணுக்கள்' [atoms with life] இயற்கையாகப்

பிறந்தன. அவை விரைந்து இயற்கையாக **ஓரணு உயிர்** முதல் ஒன்றரை இலட்சம் அணுக்கள் கொண்ட **'மானுட உயிர்'** வரை எண்ணற்ற கோடி உயிரினங்களாயின. அதாவது, இவையெல்லாம் 'அருவங்களாகவே' [கையால் தொட முடியாத ஆவிநிலை spirit form] இருந்தன. இந்த அருவ வளர்ச்சி முழுமையடைந்த பிறகே பயிரினங்களும் உயிரினங்களும் (The Flora and Fauna) தோன்றி வளர்ந்தன. இந்த வளர்ச்சி முழுமை பெற்று மனிதன் தோன்றிட நூறுகோடி ஆண்டுகள் ஆயின. அந்தக் காலக் கட்டத்தில்தான் பதினெண்சித்தர்கள் தங்களுடைய செயலர்கள் 'பதினெட்டாம்படிக் கருப்புகள்' சூழ இந் நிலவுலகுக்கு வந்தார்கள்.

## 2. மதத்தின் தோற்றம்

பதினெண்சித்தர்கள் இம்மண்ணுலகில் 'தெய்வீக அணுக்கள்' [Divine Atoms] ஊற்றெடுக்கும் இடங்களைக் கண்டுபிடித்து அவற்றை வழிபாட்டுக்குரிய இடங்களாக 'கோயில்' உண்டாக்கினார்கள். இவை தொண்ணூற்றாறு (96) பெரும்பிரிவுகளையும், பலநூறு உட்பிரிவு வகைகளையும் பெற்று விளங்குகின்றன. இந்த வழிபாட்டு நிலையங்களின் மூலமே விலங்கு நிலையிலிருந்த மனிதர்களைப் பண்பட்ட மனிதர்களாக்கினார்கள். இந்த மனிதர்களை மேம்பட்ட உயர்ந்த நிலைகளைப் பெறுவதற்குரியவர்களாக ஆக்கிட மதத்தைப் படைத்தார்கள். அதனால், வழிபடு தகுதி பெற்ற நாற்பத்தெட்டு வகையினர் வாழையடி வாழையாகத் தோன்றினர். அதனால், அருளாளர்கள், 'இறை', 'கடவுள்', 'தெய்வம்', 'ஆண்டவர்', 'பட்டவர்', 'தேவர்', 'தேவியர்', 'தேவதை', 'விண்ணவர்', 'வானவர்', 'அமரர்', 'இருடி', 'முனிவர்', 'ஈசுவரர்', 'முனீசுவரர்', 'பிறமண்', 'திருமால்' ... என்று நாற்பத்தெட்டு வகையான தேர்ச்சிகளைப் பெற்று முதிர்ச்சியடையும் தெளிவான மதத்துறை ஏற்பட்டது.

மனித உயிர் எண்ணற்ற பிறப்புக்களைப் பெறுகின்றது. உயிர் அழியாதது. ஓர் உயிரில் நூற்றைம்பதாயிரம் உயிரணுக்கள் இருக்கின்றன. எனவே, ஓர் உயிர் ஒன்றரை இலட்சம் மனிதர்களாகப் பிரிந்து பிறக்கவும்;

ஒன்றரை இலட்சம் மானுடர்கள் ஓர் உயிராக இணையவும் முடியும். ஒவ்வொரு உயிருக்கும் ஏழு பிறப்புக்களின் தொடர்பும், ஆட்சியும், வீச்சும், ஓச்சும், ... இருக்கும். அதைத்தான் **'ஊழ்வினை, விதி எனும் இரு கரைகளுக்கிடையில் ஓடுகின்ற ஆறுதான் மானுட வாழ்வு'** என்ற சித்தர்நெறித் தத்துவம் விளக்குகிறது.

# 3. பதினெண்சித்தர்கள்

விண்வெளியில் உள்ள பிற அண்டங்களுக்குரிய உலகங்களிலிருந்து பதினெட்டுச் சித்தர்கள் [A Board of Astronauts] இம் மண்ணுலகுக்கு வந்தார்கள். முதன்முதல் இம்மண்ணுலகுக்கு வந்தவர்களின் எண்ணிக்கை பதினெட்டு என்பதால் தமிழில் இந்த எண் சிறப்பைப் பெற்று விட்டது. 'பதினெண் மேல்கணக்கு நூல்கள்', 'பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்', 'பதினெண் மொழிகள்', 'பதினெண் மூலிகைகள்', 'பதினெண் நஞ்சுகள்', 'பதினெண் தைலங்கள்', 'பதினெண் சூரணங்கள்', 'பதினெண் படிகள்', 'பதினெண் சாத்திறங்கள்', 'பதினெண் தோத்திறங்கள்', 'பதினெண் சிவாகமங்கள்', 'பதினெண் புராணங்கள்' ... பதினெட்டுத் தொகை சேர்க்கும் பழக்கம் பெருவழக்காகி விட்டது.

'அனாதிக் காலப் பதினெண்சித்தர்கள்', 'ஆதிக்காலப் பதினெண்சித்தர்கள்', 'தொன்மதுரைப் பதினெண்சித்தர்கள்', 'தென்மதுரைப் பதினெண்சித்தர்கள்', 'பஃறுளியாற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்', 'குமரியாற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்', 'கபாடபுரத்துப் பதினெண்சித்தர்கள்', 'தென் இமயமலைப் பதினெண்சித்தர்கள்', 'தென்வேங்கடப் பதினெண்சித்தர்கள்', 'தென்பிறமபுத்திரா ஆற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்', 'தென்யமுனை ஆற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்', 'தென்கங்கை ஆற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்', 'தாமிரபரணியாற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்', 'வைகையாற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்', 'அமராவதியாற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்', 'காவிரியாற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்', 'கோதாவரியாற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்', 'துங்கபத்திரா ஆற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்',

‘வடவேங்கடப் பதினெண்சித்தர்கள்’, ‘வடயமுனே ஆற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்’, ‘வட கங்கையாற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்’, ‘வடபிறமபுத்திரா ஆற்றங்கரைப் பதினெண்சித்தர்கள்’, ‘வட இமயமலேப் பதினெண்சித்தர்கள்’ ... என்று நாற்பத்தெட்டு [48] வகைப் பதினெண்சித்தர்கள் குறிக்கப் படுகிருர்கள். ஏடுகளும், நூல்களும், யாமெழுதிய கையேடுகளும் [Notebooks] ஒரே இடத்தில் தொகுத்து வைக்கப்படும் வசதி வாய்ப்பு இல்லாததாலும்; காலப்போக்கில் தொடர்ந்து சித்தர்கள் பற்றிய செய்திகளே நினேவில் நிறுத்தும் வாய்ப்புக்கள் கிடைக்காததாலும்; தமிழர்கள் சமய, சமுதாய, அரசியல் போலிகளாலும் கூலிகளாலும் ‘தமிழ் வாழ்க’ என்று முழக்கமிடுவதோடு தமிழை வளர்க்கும் பணியை நிறுத்திடுவதால் ஏற்பட்ட அயர்ச்சியாலும் எம்மால் முழுமையாக நாற்பத்தெட்டு வகைப் பதினெண்சித்தர்களின் பெயர்களேயும் நினேவுபடுத்தி எழுத முடியவில்லே. எம் காலத்துக்குள் சித்தர்களேப் பற்றிய செய்திகளும்; சித்தர்களின் நூல்களும்; சித்தர்களின் சாதனேகளும் முழுமையாக உலகுக்கு அறிவிக்கப்படுமா என்பது ஐயமே! எனவேதான், எமது மலேயோடி, காடோடி, கடலோடி, நாடோடி வாழ்வின் சாதனேகளேச் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், ... வடிவில் உருவாக்கி உலவவிடும் பணியைத் துவக்கியுள்ளேன்.

“பதினெண்சித்தர்கள் பேசிய பைந்தமிழ் மொழியே இந்த மண்ணுலகில் பேசப்பட்ட முதல்மொழி; அவர்கள் தோற்றுவித்த தமிழினம், தமிழ்நாடு, தமிழ்ப் பண்பாடு [அக வாழ்வியல்], தமிழ் நாகரிகம் [புற வாழ்வியல்], தமிழ்ச் சமுதாய அமைப்பு தமிழர் அரசியல், தமிழர் இலக்கியம், தமிழ்ச் சமயம் {சித்தர் நெறி => சீவநெறி => சிவநெறி -> சைவ நெறி = இந்தியாவின் மதம் => இந்துமதம் INDUISM. ஃ இந்துமதம் மற்ற மதங்கள் போல் தனிமனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு மதமல்ல; இது, ஒரு வாழ்வியல் நெறி. (The Induism is not a Religion; It is a Social Philosophy or Way of Life. It is the Mother Liquor for all Sciences, arts and Religions) இதுவே அனேத்து அறிவியல்களுக்கும்,

கலைகளுக்கும், மதங்களுக்கும் தாய்.} ....... என்பவையே இவ்வுலகில் முதன்முதல் உருவாகிட்ட ‘இனம்’, ‘நாடு’, ‘பண்பாடு’, ‘நாகரிகம்’, ‘சமுதாயம்’, ‘அரசியல்’, ‘இலக்கியம்’, ‘மதம்’ ...” என்று குறிப்பதோடு விரிவஞ்சிப் பதினெண்சித்தர்கள் பற்றிய சுருக்கக் குறிப்பை நிறுத்திக் கொள்ளுகிறேன். இத் தலைப்பில் பல நூல்கள், நூற்றுக் கணக்கான கட்டுரைகள், ஆயிரக்கணக்கான அஞ்சல்கள் எழுதியுள்ளேன். தமிழகம் தொடர்ந்து தூங்குகிறது. நான் ஏங்குகிறேன்.

# 5. சித்தர்கள்

பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகள் எனப்படும் [செயலாளர்களும்] அருளாளர்களும் இம்மண்ணுலகில் தோன்றிய மானுட இனத்தவர்களுடன் உறவு பூண்டு உருவாக்கியவர்களே சித்தர்கள். இந்த ‘அருள் ஊற்றுக்கள்’, ‘அருள் மழைகள்’, ‘அருள் வித்துக்கள்’, ... காலம் தோறும் தோன்றிச் செயல்பட்டே வருகிறுர்கள்.

நவகோடி சித்தர்கள், நவநாத சித்தர்கள், நான்மறைச் சித்தர்கள், நான்மறையாந்தச் சித்தர்கள், நான்முறைச் சித்தர்கள், நான்முறையாந்தச் சித்தர்கள், நான் நெறிச் சித்தர்கள், நான் நெறியாந்தச் சித்தர்கள், நான்வேத சித்தர்கள், நான்வேதாந்த சித்தர்கள், நான் நாத சித்தர்கள், நான் நாதாந்த சித்தர்கள், நான் சித்த சித்தர்கள், நான் சித்தாந்த சித்தர்கள், நான் போத சித்தர்கள், நான் போதாந்த சித்தர்கள், நான் ஆகம சித்தர்கள், நான் ஆகமாந்த சித்தர்கள், நான் யோக சித்தர்கள், நான் யோகாந்த சித்தர்கள், நான் போக சித்தர்கள், நான் போகாந்த சித்தர்கள், நான் மோக சித்தர்கள், நான் மோகாந்த சித்தர்கள், நான் ஓக சித்தர்கள், நான் ஓகாந்த சித்தர்கள், நான் ஓம சித்தர்கள், நான் ஓமாந்த சித்தர்கள், நான் யாக சித்தர்கள், நான் யாகாந்த சித்தர்கள், நான் யக்ஞ சித்தர்கள், நான் யக்ஞாந்த சித்தர்கள், [...], [...], நான் தவ சித்தர்கள், நான் தவாந்த சித்தர்கள், நான் வேள்வி சித்தர்கள், நான் வேள்வியாந்த சித்தர்கள், நான் பத்த சித்தர்கள், நான் பத்தாந்த


சித்தர்கள், நான் போத்த சித்தர்கள், நான் போத்தாந்த சித்தர்கள், நான் புத்த சித்தர்கள், நான் புத்தாந்த சித்தர்கள், நான் முத்த சித்தர்கள், நான் முத்தாந்த சித்தர்கள், நான் சீவன்முத்த சித்தர்கள், நான் சீவன்முத்தாந்த சித்தர்கள், நான் உருவசித்திச் சித்தர்கள், நான் உருவசித்தியாந்த சித்தர்கள், நான் அருவசித்தி சித்தர்கள், நான் அருவசித்தியாந்த சித்தர்கள், நான் அருவுருவ சித்தி சித்தர்கள், நான் அருவுருவ சித்தியாந்த சித்தர்கள், ... என்று எண்ணற்ற வகைப்படுவர் என்பதை மட்டும் இங்கே குறிப்பதோடு நிறுத்திக் கொள்ளுகிறேன். ஆர்வமுள்ளவர் நேரிலும் நூல்களிலும் அறிக.

## 6. பதினெண்சித்தர் பீடாதிபதிகள்

எமது ஆர்வலர்கள் தஞ்சையில் வெளியிட்டுள்ள 'தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் கருவூரார் கதை' என்ற புத்தகத்தில் விரிவான செய்திகள் 'பதினெண்சித்தர் பீடாதிபதிகள்' பற்றி உள்ளன. இம் மண்ணுலகில் இதுகாறும் பதினோரு பீடாதிபதிகள் தோன்றியுள்ளனர். யாமே, பன்னிரண்டாவது பீடாதிபதியாகத் தோன்றியுள்ளோம். யாம், எமது பெற்றோர், உற்றார், உறவினர், மகான்கள், ஞானிகள், தவசிகள், இருடிகள், முனிவர்கள், சித்தர்நெறிச் சான்றோர்கள், ஆன்றோர்கள், பத்தர்கள், பத்தியார்கள், போத்தர்கள், போத்தியார்கள், முத்தர்கள், முத்தியார்கள், சீவன்முத்தர்கள், சீவன்முத்தியார்கள், உருவசித்தர்கள், அருவசித்தர்கள், அருவுருவ சித்தர்கள், ... முதலியவர்களிடம் கற்றும், நோற்றும், பயின்றும், முயன்றும் பெற்றவைகளைத் தாய்த் திருநாடாம் 'செந்தமிழ் நாட்டினை' நாற்றங்காலாக்கி இந்தியத் துணைக்கண்டத்தும், உலகத்தும் பயிர் செய்ய உழைக்கிறோம். மானுட நல உரிமைக்காக உழைப்பதனையே பெருமையாகக் கருதுகிறோம். தமிழ்மொழியால் அனைத்துத் தெய்வீகச் சத்திகளையும், சித்திகளையும் அடைய முடியும் என்ற பேருண்மையினைச் செயலாக்கி வருகின்றோம்.

சித்தர்கள் படைத்த அறிவியல்களும், கலைகளும், வாழ்வியல் தத்துவங்களும், சமுதாய இயல் சித்தாந்தங்களும், அரசியல் கோட்பாடுகளும், பொருளாதாரச் சமத்துவக் கொள்கைகளும், பிறப்பிறப்பற்ற பேரின்பப் பெருவாழ்வு நாடும் குறிக்கோள்களும், எவ்வித ஏற்றத்தாழ்வும் அற்ற கூட்டுறவுச் சமுதாய வாழ்க்கை நோக்கங்களும், ... விரிந்து விரைந்து நிறைவேற வேண்டும் என்பதற்காகவே **இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைச்** செயல்படுத்தப் புறப்பட்டுள்ளோம் யாம்.

உலக ஒற்றுமை, உலகச் சமாதானம், உலகச் சகோதரத் தத்துவம், உலகப் பொதுவுடமை, உலக ஆன்மநேய ஒருமைப்பாடு, உலக மானுடநலப் பாதுகாப்பு, உலகப் பண்பாட்டு வளர்ச்சி, உலகக் கலை இலக்கியச் செழிச்சி, உலக மத மறுமலர்ச்சி, உலக மானுட அன்பு வளர்ச்சி, ... எனப்படும் சித்தர்நெறி தழைக்க உழைப்பதே எம் வாழ்வு. அனைவரையும் எம்மோடு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.



**மெய்ஞ்ஞானக்கொடி**

# இந்து மறுமலர்ச்சி இயக்க விளக்கச் சுருக்கம்

## [The Synopsis of the Indu Marumalarchi Iyakkam]

இது ஒரு பண்பாட்டுக் கழகம் [This is a Cultural Organisation]. இது சித்தர்களால் கி.பி. 1772இல் தோற்றுவிக்கப் பட்டது. வரலாற்றுக்கு முந்திய காலம் தொட்டுக் குருதிவண்ணச் சிவப்புத் துணியில் கருப்பு வண்ணச் சிவலிங்கமும் மூன்று திருநீற்றுப் பட்டை, ஒரு குங்குமப் பொட்டும் 'ஞானக்கொடி' என்று வழங்கப்படும் கொடி சித்தர் நெறிக்கே உரியதாக இருந்து வந்திருக்கின்றது. இதுவே, தமிழர் மதக்கொடி. இதுவே இந்தியாவின் மதம் என்ற பெயரில் வழங்கப்படும் 'இந்துமதம்' என்ற சொல்லுக்குரிய மதத்தின் கொடியாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.

இன்றைய 'ஞாலகுரு', குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரர் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார் அவர்கள் மேற்படி ஞானக்கொடி இந்து மறுமலர்ச்சி இயக்கத்துகே உரியது என்று அருளார்ந்த அறிவிப்பு வழங்கியுள்ளார். எனவே, எல்லா இந்துக்களும் இக்கொடியை வழிபாட்டுக்குரியதாக ஏற்றுப் போற்றிடல் வேண்டும். அதாவது, இனிமேல் எல்லா வழிபாட்டு நிலையங்களிலும்; பத்திக்குரிய நிகழ்ச்சிகளிலும் இக்கொடி பட்டொளி வீசிப் பறக்க வேண்டும். அதுவே, இந்துமதத்துக்குத் தேவையான நிறுவன நிர்வாக வடிவமைப்பை நல்கி இந்துமத மறுமலர்ச்சியைத் தோற்றுவித்திடும். எனவே, ஒவ்வொரு இந்துவும் இந்தக் கொடியினைப் பூசையறையிலும், வீட்டு முன்னும் இடம்பெறச் செய்தல் வேண்டும்.

இவரது இயக்கம் 'தனிமனித வாழ்வு', 'குடும்ப வாழ்வு', 'சமுதாய வாழ்வு' முதலியவை சிறக்க இந்துமதத்தின் தத்துவங்களாலும்,

செயல்முறைகளாலும் பணியாற்றும். இதற்காகச் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், அருளாளிகள், மருளாளிகள், பூசாறிகள், குருக்கள், சன்னிதானங்கள், ஆதீனங்கள், பீடங்கள், மடங்கள், திருவடிகள், அமளிகைகள், இருக்கைகள், நாயகங்கள் ... என்று (48) நாற்பத்தெட்டு அருளாளர்கள் உருவாக்கப் படுகிறுர்கள். 'எல்லோரும் நலம் பெற்று இனிது வாழ' அன்பு வழியில், அமைதி வழியில் முயல்வதே இதன் செயல்திட்டம்.

இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை (The Manifesto of the Indu Marumalarchi Iyakkam] என்ற கட்டுரை {சிறு புத்தகம் (A Booklet)} இந்த இயக்கம் பற்றிய முழு விவரங்களேயும் தெரிவிக்கும். இந்த இயக்கம் பன்னெடுங்காலமாகப் பைந்தமிழரின் பண்பாட்டுத் தத்துவமாகவும் [Cultural Philosophy], அரசியல் சித்தாந்தமாகவும் [Political Policy, Principle], சமயக் கோட்டையாகவும் [Religious Theosophy and Motto] கொண்டுள்ள 'சமத்துவச் சகோதரத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைப்பதையே தனது கொள்கையாகக் கொண்டிருக்கிறது.

எல்லா வழிபாட்டு நிலேயங்களேயும் [Temples] புத்துயிர்ப்புச் செய்து அருளூற்றுக்களாக ஆக்கி மக்களின் தாகங்களேயும், பசிகளேயும் தீர்ப்பதே இந்த இயக்கத்தின் செயல்திட்டம்.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சித்தர்களின் அறிவியல்களாலும் [Sciences], கலேகளாலும் [Arts] பழம்பிறப்புக்களேயும், மறுபிறப்புக்களேயும் அறியும் வாய்ப்பு வசதிகளே வழங்குவது இந்த இயக்கத்தின் தலேயாய செயல்முறை.

சித்தர்கள், 'ஒவ்வொரு மனிதனும் முயன்றுல் படிப்படியாகக் கடவுளாகலாம்' என்று கூறும் தத்துவத்தின் செயல்வடிவமாகவே இந்த இயக்கம் இருந்திடும். உலக ஒற்றுமை, உலக அமைதி, உலகச் சமாதானம், உலகச் சகோதரத்துவம், உலகச் சமத்துவம்... என்பனவே இந்த இயக்கத்தின் குறிக்கோள்.

இவற்றை ஏற்றுச் செயல்பட விருப்பம் உள்ளவர்களே இந்த இயக்கத்தில் சேரலாம்.

**அக இருளும் புற இருளும் அகன்றிட இந்து மறுமலர்ச்சி இயக்கம் வளரட்டும்! வளரட்டும்! வளரட்டும்!**

## “இந்து மறுமலர்ச்சி இயக்க வீரமுழக்கங்கள்”

1. பொருளுலகில் வாழும் அனைத்து வகையான வறட்சிகளையும் அகற்றும் வல்லமை அருளுலகப் புரட்சிக்குத்தான் உண்டு.
2. நாத்திகர்களின் மடமைகளையும், பிற்போக்குகளையும், வெறிகளையும் கூட நலப்படுத்தும் வலிமை ஆத்திகர்களுக்குத்தான் உண்டு.
3. பகுத்தறிவு வாசகங்கள், சீர்திருத்த வாசகங்கள், புரட்சி வாசகங்கள், மறுமலர்ச்சி வாசகங்கள்.... உருவாக்கித் தராத சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை அருள் வாசகங்கள் அமைத்தே தீரும்.
4. அருளொளியால்தான் அகவாழ்விலும், புறவாழ்விலும் மண்டிக் கிடக்கும் இருள்களை முழுமையாக அகற்ற முடியும்! முடியும்! முடியும்!
5. அறிவியல் சாதனைகளால் நலப்படுத்த முடியாதவைகளையும் நலப்படுத்துபவையே அருள்நெறிச் சாதனங்கள்.
6. நமது மதம் கதைகள் நிறைந்த ஒன்றல்ல, தத்துவ விதைகள் நிறைந்த ஒன்று.
7. நமது மத ஞானம் ஒரு மெய்ஞ்ஞான விஞ்ஞானம். இஞ்ஞானம் அகவாழ்வையும், புறவாழ்வையும் விளக்கும் விஞ்ஞானம். இதற்கு ஈடாக எஞ்ஞானமும் இல்லை.
8. நமது மதம் ஒரு மாபெரும் வாழ்வியல் தத்துவம். சமுதாய இயல் சித்தாந்தம். [தத்துவம் = Philosophy; சித்தாந்தம் = Theology]
9. அருளை அநுபவப் பொருளாக அனைவருக்கும் வழங்க வல்ல உண்மை மதமே சித்தர் நெறி.

அன்பே சிவம்

# POLITICAL HISTORY

# அரசபாரம்பரியம்

# சித்தர்கள் தரும் வரலாற்றுச் செய்திகள்

உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டுக் கழகம்
உலக மத ஒற்றுமைக் கழகம்
உலக அருளாளர் கழகம்
இந்தியத் தத்துவக் கழகம்
இந்திய சித்தாந்தக் கழகம்
இந்திய பண்பாட்டுக் கழகம்
சித்தர் அருளியல் கலைக் கழகம்
சித்தர் பொருளியல் கலைக் கழகம்
சித்தர் போரியல் கலைக் கழகம்

"... பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரர் அவர்கள் இருநூற்றைம்பதாண்டு காலத்தில் சாதிக்க முடியாதவைகளைச் சாதிக்க பல கலைக் கழகங்களைப் பல நாடுகளிலும், பல நோக்குகளில் பைந்தமிழ்ப் பெரியார்களைக் கொண்டு உருவாக்கினர். அவற்றின் அருமையையும், பெருமையையும், அரிய பயனையும் தெரிந்தே பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் தஞ்சையில் பன்னாட்டுப் பன்னோக்குப் பல்கலைக் கழகம் நிறுவி அதன் கருவூலமாக தஞ்சைப் பெரிய உடையார்க் கோயிலாகக் கட்டி அதன் மடியில் நீள் தவத்தில் ஆழ்ந்திட்டார்.

குருபாரம்பரியம்
கருவூர்த் தேவர் வாக்கு
திருமாளிகைத் தேவர் வாக்கு

பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்ட நிறைவுடையார், நல்லிலக்கண மார்புடையார், ஞாலகுரு, ஞானகுரு, அரசயோகி, ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், குருமகா சன்னிதானம், சித்தர் கருவூரார், குருதேவர், இன்றைக்குத் தமது பயிற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும், முயற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும், உலகெங்குமுள்ள எல்லாக் கலைக் கழகங்களையும் தொடர்புபடுத்தி ஓர் இணைப்புச் செயல்நிலையை உருவாக்கி யிருக்கிறார்.

எனவே, இவர், இவரது முன்னோர் “தாய்வழித் தாத்தா” ‘கண்டப்பக் கோட்டையார்’ என்றும், ‘சித்தர் ஏளனம்பட்டியார்’ என்றும் அழைக்கப்படும் உ.இராமசாமிப் பிள்ளை அவர்கள் கி.பி.1772இல் உலகம் முழுவதும் உள்ள மதவாதிகளை மறுமலர்ச்சி பெறச் செய்வதற்காக உயிரணுவைக் குறிக்கும் சொல்லான ‘இந்து’ என்ற சொல்லைப் பயன்படுத்தி உருவாக்கிய “இந்து மறுமலர்ச்சி இயக்கம்” என்ற அமைப்பை இன்றைய உலகியலுக்கும் அரசியல் சட்டதிட்டக் கட்டுப்பாட்டு நிர்ணயங்களுக்கும் உட்பட்ட ஓர் அமைப்பாகப் பதிவு செய்கிறார்.

இந்தச் சங்கம் பல கழகங்களின் சங்கமாகும். இது சமய, சமுதாயப் பண்பாட்டுக் காப்பகமாக, கருவூலமாக, வளர்ச்சிப் பண்ணையாக இருக்கும். இதன்கீழ் வரும் அனைத்துக் கழகங்களும் இச்சங்கத்தைத் தோற்றுவித்தவர் ஆணைப்படிச் சித்தர் கருவூராரின் பரம்பரையினர் பாரம்பரியத் தலைவராகக் காலங்கள் தோறும் இருப்பர். தேவை ஏற்படும் போது இவர்கள் சங்கத்திலும் பிறவற்றிலும் நேரடியாகத் தலையிட்டு அனைத்தையும் மாற்றித் திருத்திச் சீரமைக்கும் உரிமையினைப் பெற்றவர்கள் என்று தெளிவான சட்டக் கருத்துடன் பதிவு செய்கின்றார். அரசியல் சட்டப்படி சங்கங்களுக்குரிய எல்லா விதிமுறைகளும் கடைப்பிடிக்கப்படும். ஆனால், தோற்றுவித்தவர்க்கு என்று சிறப்பு உரிமையும், அதிகாரமும் வழங்கப்பட்டே இ.ம.இ. ஒரு பண்பாட்டுக் கழகமாக [A Cultural Organisation] பதியப்படுகிறது.

எனவே, பதினெண்சித்தர்கள் பைந்தமிழில் படைத்த பல கலைகளையும், மானுட நல்வாழ்வு விழிச்சிக்காகவும், எழுச்சிக்காகவும், செழுச்சிக்காகவும் பயன்படுத்தும் ஒரு பண்பாட்டு இயக்கமாகவே செயல்படும் இந்த இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

பதினெண்சித்தர்கள் 'ஞானக்கொடி', 'மெய்ஞ்ஞானக்கொடி' என்று குறிக்கும் குருதி வண்ணச் சிவப்புத் துணியில் கருப்புச் சிவலிங்கம் பொறித்து, அதில் மூன்று திருநீற்றுப் பட்டைகளும், அதன்மேல் நீண்ட வட்ட குருதி வண்ணச் சிவப்புப் பொட்டும் உடைய கொடியே இந்த இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொடியாக இருக்கும். மேலும், இன்றைய 'ஞாலகுரு' குருதேவர் அவர்களின் தலைமையில் இயங்கக் கூடிய கழகங்கள், சங்கங்கள், இயக்கங்கள், அவைகள், பேரவைகள், மன்றங்கள், மாமன்றங்கள்... முதலிய அமைப்புக்களுக்கு மட்டுமே உரியது இந்தக் கொடி என்ற உரிமையும் பதிவு செய்யப்படுகிறது. இதனுல் வேறு யாரும் குருதேவரின் அநுமதியும், இசைவும், ஒப்புதலும் இன்றி இக்கொடியை எதற்காகவும் பயன்படுத்தக் கூடாது. அப்படிப் பயன்படுத்துபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**//உண்மை நகல்//**



# இயக்க வளர்ச்சி நிலை - குருதேவரின் விளக்கம்

17-6-84 ஞாயிறன்று சங்கமாகப் பதிவு பெற்ற இ.ம.இ.யின் முதலாம் ஆண்டு நிறைவை யொட்டி நடைபெற்ற விழாவில் இ.ம.இ. தலைவர் ஞாலகுரு சித்தர் கருவூறார் வழங்கிய வளர்ச்சி நிலை விளக்கம்:

1. உலகம் முழுவதும் பதினெண்சித்தர்களால் அருள் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப் பட்டு 48 வகையான வழிபாட்டு நிலையங்கள் உருவாக்கப் பட்டன. ஆனால், அந்தந்த வட்டார இயற்கைச் சூழலுக்கும், தேவைக்கும் ஏற்ப வழிபாட்டு நெறி முறைகள் வகுக்கப் பட்டன. பதினெண்சித்தர்கள் தங்களது தாய்மொழியான தமிழ்மொழியை அடிப்படையாகக் கொண்டே உலகெங்கும் பல்வேறு மொழிகளைத் தோற்றுவித்து அவரவர் தாய்மொழியிலேயே வழிபாடுகள் நிகழ்த்திட ஏற்பாடுகள் செய்தனர்.

பூசைமொழி **'வாசகங்களும்'** (எழுதப் பட்டவை), **'வாக்குகளும்'** (எழுதாக் கிளவிகள்) ஓதப்படும் போது தமிழ்மொழியின் அடிப்படை ஒலிகளாகவே இருப்பதை என்றென்றும் எவரும் உணரும் வண்ணமே உலகமொழிகளும் வழிபாட்டு முறைகளும் படைக்கப் பட்டுள்ளன. எனவே, மொழிச் சர்வாதிகாரமோ, ஆதிக்கமோ, அடிமைநிலையோ உருவாகாமல் என்றென்றும் மதத் தனிமைகள், விடுதலைகள், தன்னுரிமைகள் போற்றிப் பேணப்பட வழிவகைகளைச் செய்துள்ளனர் பதினெண்சித்தர்கள்.

2. பணக்காரர்கள் வசதிமிக்க வாழ்வு, வளமான உணவு, அடிக்கடி கோயில் வழிபாடு, தேவைக்கேற்ப மந்திரவாதி பூசாறி மருளாளி உதவி பெறல், ... என்பனவற்றால் பேய், பிசாசு, காற்று, கருப்பு, கோள், மீன், இராசி, ... முதலியவைகளின் பாதிப்புகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால், ஏழை, எளிய, பாட்டாளிப் பாமர மக்கள் நாத்திகத்தால், கடவுள் மறுப்பால், சோம்பேறித் தனத்தால், வளமற்ற உணவால், ... மேற்படிப் பாதிப்புகளால் மெலிந்தும், நலிந்தும், கேடுற்றும் துன்புறுகின்றனர். இவற்றால், பாட்டாளி வர்க்கத்தையும், மத்திய தர வர்க்கத்தையும்

காப்பாற்றும் பொருட்டே ஒவ்வொரு ஊரின் பல பகுதிகளிலும் அ.வி.தி. நிலையங்களை அமைத்து அருளை மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கிடும் பணியினைப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி உருவாக்கி யுள்ளார். இப் பணி இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் வளர்ச்சி நிலையை விளக்குவதாகவே உள்ளது.

3. "இம் மண்ணுலகில் ஒரு நாடு மற்றொரு நாட்டையோ!, ஒரு மாநிலம் மற்றொரு மாநிலத்தையோ! ஓர் இனம் மற்றோர் இனத்தையோ! ஒரு மொழி மற்றொரு மொழியையோ ... அடக்கி ஆளுவதும், அதிகாரம் செய்வதும், சுரண்டுவதும், அடிமைப்படுத்துவதும் தவறு! தவறு! தவறு! ..." என்று பதினெண்சித்தர்கள் விளக்கி யுள்ளனர்.

இக் கருத்துப்படியே, 'தனியுரிமை', 'தன்னுரிமை', 'தன்னாட்சி', 'தன்மான வளர்ச்சி', ... முதலிய பண்புநலன்கள் உலகெங்கும் பேணப்படுவதற்காக உழைக்கவே **இந்து மறுமலர்ச்சி இயக்கம்** தோற்றுவிக்கப் பட்டிருக்கிறது. எனவே, மேற்கூறிய பண்புநலன்கள் இந்தியத் துணைக் கண்டத்திலும், தமிழகத்திலும் பேணி வளர்க்கப்பட முயல வேண்டிய கடமை இ.ம.இ.க்கு உண்டு. இதனை அனைவரும் தெரிய, அறிய, புரியச் செய்வதில்தான் இன்றைய பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் வாழ்நாள் செலவாகிறது.

4. முதலில் தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றும், இன ஒற்றுமை யுணர்வும் தழைத்தோங்கச் செய்ய வேண்டும். தமிழினத் துரோகிகளே இல்லாத நிலையை உருவாக்கிய பிறகுதான் விரோதிகளைப் பற்றிய சிந்தனையும், செயலும் பிறக்க வேண்டும். இதற்குப் பண்பாட்டுப் புரட்சியும், மொழியுணர்ச்சியில் விழிச்சியும், மத உணர்ச்சியில் எழுச்சியும், இன உணர்ச்சியில் செழுச்சியும் ஏற்பட வேண்டும். அதற்கேற்ற பணிகளைச் சிந்தித்துத் திட்டமிட்டு செயலாக்கலே **இ.ம.இ. வளர்ச்சி நிலை விளக்கம்**.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு சி.கவிக்குமார் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# To Form The Institutions of INDHUISM

# இந்துமத நிறுவனங்களைத் தோற்றுவித்திட

நாட்டில் வழக்காற்றில் உள்ள வழிபாட்டு நிலையங்களில் உள்ள இயங்கு நிலைகளால்தான் (the functioning and the maintenance of the Indu Temples) இந்துமதம் உயிரோடு இருக்கிறது. ஆனால், இந்துக்களிடையே தத்துவ விளக்கம் (Philosophy), செயல் சித்தாந்தம் (Theology), கூட்டு வழிபாட்டு முயற்சி (Collective Worship), ஒற்றுமை (Religious Unity), கட்டுப்பாடு (Religious Bindings), ஒருமித்த விழிப்புணர்வு (Uniform Religious Awareness), சமுதாயக் கட்டமைப்பு, மெய்யான மதத் தலைமை (The True and Sincere Leadership), உண்மையான மதவரலாறு (The True and Correct History), உரிய இலக்கியம் (The Proper and Appropriate Literature), முறையான சிந்தனை (The Legal and Scientific Thinking), நிறைவான பயிற்சி (The Rationalistic, Revolutionary and a Finite Training), ... முதலியன உடனடியாகத் தேவை. இதற்காகச் சிந்தித்து புதிய புதிய வடிவமைப்புடைய நிறுவனங்களையும், நடைமுறைகளை விரைவும் விரிவும் ஒழுங்கும் பயனும் ... உடையவையாக மாற்றும் நிர்வாகங்களையும்; வாழ்வியலில் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுரிமை, தன்னம்பிக்கை, தன்மானம், பண்பாட்டு விடுதலை, ... முதலியவை செழித்தோங்கச் செய்யும் இயக்கங்களையும், கழகங்களையும்; செயல்நிலைகளில் உண்மை, அன்பு, ஒற்றுமை, சமத்துவம், பொதுவுடமை, சமாதானம், பொறுப்பு, பொறுமை, இனமானப் பற்று, மொழிப்பாசம், பண்பாட்டுரிமைப் போராட்ட உணர்வு, நாகரிக விடுதலைப் போர் வேகம், தன்மானத் தாகம், சுயமரியாதை மோகம், ... முதலியவை முளைத்துக் கிளைத்துத் தழைத்துச் செழித்திடச் செய்யும் பாரம்பரிய வீறு பெற்ற தலைவர்களையும், ... தோற்றுவிக்க வேண்டும்.

இவையெல்லாம் தோற்றுவிக்கப் பட்டவுடன் மக்களே இவற்றை விரும்பி, ஏற்றுப் போற்றிப் பேணிப் பயன்படுத்தும் நிலைகளை அருளாளர்கள்தான் (The Mystics, Divinators, Sages and Saints = The SIDDHARS) உருவாக்க முடியும். ஆனால், இன்றுள்ள அருளாளர்களுக்கிடையில் போட்டி, பொருமை, அகம்பாவம், ஆணவம், தானென்ற தலைக்கனம், கர்வம், வறட்டு வீம்பு, அறியாமை, மடமை, புகழ்வெறி, பொருள்வெறி, பகுத்தறிவுப் போக்கின்மை, விஞ்ஞான நோக்கின்மை, சமுதாயநல நாட்டமின்மை, மொழிப்பற்றின்மை, இலக்கிய அறிவின்மை, ... என்று எண்ணற்ற குறைகள் இருக்கின்றன. எனவேதான், மதமறுப்பும், வெறுப்பும், எதிர்ப்பும், நாத்திகமும், மதத் துரோகமும், மத விரோதமும், மதப் போலியும், மதக் கூலியும், மதக் காலியும், மதச் சுரண்டலும், மதச் சோம்பலும், மதச் சர்வாதிகாரமும், மத முதலாளித்துவமும், மதப் போட்டிபொருமையும், மதமாற்ற வெறியும், மதச் சண்டைச் சச்சரவும், மத வெறுமையும், மத ஆபாசமும், மத மடமையும், மத அடிமையும், மதச் சூழ்ச்சியும், ... வளர்ந்து கொண்டே போகின்றன. இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்து அருளாளர்களை இணைத்துப் பிணைத்து ஒருங்கிணைந்த முயற்சியால் 'மத மறுமலர்ச்சிப் பணிகள்' (The Religious Renaissance Services) துவக்கப்பட்டிடல் வேண்டும். இதற்குரிய தலைவர் யார்? தத்துவம் எது? சித்தாந்தம் என்ன? இலக்கியங்கள் யாவை?!?!?!?!

இவற்றை, இன்றைய அனைத்து மதப் பெரியவர்களும், இளைஞர்களும், ... உண்மையான உணர்வோடு சிந்திக்க வேண்டும். அப்பொழுதுதான் இம்மண்ணுலக மனித நாகரிகத்துக்கும், பண்பாட்டுக்கும், தாயாக, மூலமாக, முதலாக, அடிப்படையாக, உள்ளீடாக உள்ள பதினெண்சித்தர்களின் சித்தர்நெறியான இந்துமத மறுமலர்ச்சிப் பணி 'உலகமத இணைப்புப் பணியாக', 'உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுப் பணியாக', 'உலகச் சமாதானப் பணியாக', 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கும் பணியாக', '... மலரும், வளரும்.

எனவே, மானுட நலம் காக்கும் எண்ணமுடையோர் அனைவரும் ஒன்றுதிரள அழைப்பு விடுக்க வேண்டும்.

இன்றைக்கு இந்துமதத்துக்குரிய நமது நாட்டில்; அரசியல் வாதிகள், மக்களாட்சி முறையென்று கூறிக்கொண்டு; சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெறுவதற்காக இந்துமதம் சிதையவும், சீரழியவும், நலியவும், ... காரணமாகவுள்ள பல சலுகைகளையும், வாய்ப்பு வசதிகளையும் மாற்று மதத்தவர்க்கு வாரிவாரி வழங்குகிறார்கள். இதனால், மதக் கசப்பு, வெறுப்பு, வெறி, பொறாமை, சண்டை சச்சரவுகள், மதத் துரோகங்கள், விரோதங்கள், ... முதலியவைதான் வளருகின்றன. மதத்தின் புனிதமும், இனிமையும், தூய்மையும், வாய்மையும், பயனும் அழிய நேரிட்டு விட்டது. எனவே, மதவாதிகள் ஒருங்கிணைந்து அனைத்து மதங்களும் மானுட நலத்துக்கே என்ற பேருண்மையினைப் புரியவைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். அதற்கு, இந்து மதமெனும் சித்தர்நெறியால்தான் பொதுவான செயல் சித்தாந்தத்தை வழங்க முடியும்.

("... All the ills and evils have come forward in a disguised form as Political Parties and Social Reformation Movements. On account of these, the Society is lead and guided by selfish and anti-social elements. So, the pious and religious people must come forward to take sincere and severe steps to put an end to all these atrocities. For this, new Institutions, Missionaries and Congregations must be built up under the guidance of the Divinators, Mystics, Sages and Saints, ..." Mr M.Palanisami Pillai, Siddhar Kaakkaiyar)

***நகல் எழுதியது:-***

அன்பு

தலைமைப் பணியாளர், பொதுச் செயலாளர், சித்தர் மகன், வாரிசு, பதிலி, சித்தரடியார், தெய்வீகாச்சாரியார் சோ.இரவீந்திரன், 21/1/1986

***//உண்மை நகல்//***

# குருதேவரின் 49ஆவது ஆண்டுப் பிறந்த நாள் செய்தி

இந்துமதத்தால்தான் இந்தியச் சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, குடும்ப வாழ்வு, தனிமனித வாழ்வு, ... முதலிய அனைத்தும் தூய்மைப்படும், வாய்மைப்படும், உய்வு பெறும். அதாவது, அனைத்து வகையான ஏற்றத் தாழ்வுகளையும், வேற்றுமைகளையும், வெறிகளையும், ஏமாற்றுக்களையும், சுரண்டல்களையும், அடிமைநிலைகளையும் இந்திய மக்கள் வாழ்விலிருந்து அகற்றும் வல்லமையும், வழிமுறைகளும் இந்துமதத்தில்தான் இருக்கின்றன. எனவே, இந்துக்கள் தங்கள் தங்களின் குடும்பத்தின் காணிக்கையாக ஓர் இளைஞரை இந்துமத மறுமலர்ச்சிப் பணிக்காக வழங்க வேண்டும். இந்த இளைஞர்கள் தாய்மொழி அறிவும், சுறுசுறுப்பும், தன்னம்பிக்கையும், இந்துமதப் பற்றும், சமுதாய ஒற்றுமையில் நாட்டமும் உடையவராக இருந்தால் போதும். மிக விரைவில் ... ... ... ***{இரு வரிகள் நகலில் அழிந்து போயிருந்தன.}***

இந்துமதம் பதினெண்சித்தர்களால் இளமுறியாக் கண்டத்தில் நான்கு உகங்களுக்கும் (யுகம்) முன் அனாதிக் காலத்தில் வாழ்ந்த மணீசர்களை மனிதர்களாக்குவதற்காக இன்றைக்கு (1984இல்) 43,73,085 ஆண்டுகளுக்கு முன்னால் வழங்கப்பட்ட ஒரு மாபெரும் சமுதாய, அரசியல் தத்துவம். இதனை மீண்டும் இந்திய மக்கள் தெரிந்தும் புரிந்தும் உணர்ந்து நம்பியும் செயல்படுவதைப் பொறுத்துத்தான் நல்ல வருங்காலம் உருவாகும்.

கலியுகத்தில் 2000 ஆண்டுகள் கழித்து இந்தியாவுக்குள் நுழைந்த வடஆரியர்கள் தங்களின் வேதநெறியை இந்துமதத்தில் கலந்து உண்மையான இந்துமதத்தின் அறிவியல் நிலைகளையும், பயன்படு நிலைகளையும் பாழ்படுத்தி விட்டார்கள். இவர்களுடைய பேச்சு வழக்கிலிருந்த மொழியைத் தமிழின் அடிப்படையில் எழுத்து, இலக்கியம், இலக்கணமுடைய சமசுக்கிருத மொழியாகச் சித்தர்கள் படைத்துக் கொடுத்தனர். இதனால் இவர்கள் தமிழ்மொழி இந்துமதத்தை விளக்குவதையும், வளப்படுத்தி வளர்ப்பதையும் எளிதாகச் சமசுக்கிருத மொழி மூலம் தடுத்துக் கெடுக்க முடிந்தது. எனவே, வடஆரிய வேதநெறியின் அண்டப் புளுகுகளையும், ஆபாசங்களையும், சூழ்ச்சிமிக்க சுரண்டல் போக்குகளையும், ஏமாற்றுக்கள் மிகுந்த சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளையும்; தெய்வீக அருள் ஊறச்

செய்யும் ஆற்றலற்ற செத்துப் போன சமசுக்கிருத மொழியையும் வெறுத்த மக்கள்! எதிர்த்த மக்கள்! காலப்போக்கில் இந்துமதத்தையே வெறுக்கவும், எதிர்க்கவும் ஆரம்பித்து விட்டார்கள். இதனால், நாத்திகப் போக்கும், மதமறுப்பும், மதவிரோதச் செயல்களும், மத துரோகச் செயல்களும் மிகுந்து விட்டன. அதனால், உடனடியாகப் பதினெண்சித்தர்கள் படைத்த உண்மையான இந்துமத வரலாறு, இலக்கியங்கள், தத்துவங்கள், சித்தங்கள், நாதங்கள், போதங்கள், ஓதங்கள், சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகள், முறைகள், நெறிகள், வேதங்கள், ஒழுகலாறுகள், … முதலிய அனைத்தையும் பற்றி அச்சிட்ட புத்தகங்கள், நாளேடுகள், வார இதழ்கள், மாத மலர்கள், … முதலியவை வெளிவர ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலாக அல்லது துணையாக … விரைவில் குருகுலங்கள், வார வழிபாட்டு மன்றங்கள், ஓகாசன யோகாசனப் பள்ளிகள், தவச்சாலைகள், அருட்கல்வி நிலையங்கள், அருளை அநுபவப் பொருளாக வழங்கும் அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்கள், … முதலியவை உருவாக்கிச் செயல்படல் வேண்டும். இவைதான் இந்துமத மறுமலர்ச்சிக்கும், வளவளர்ச்சிக்கும், ஆட்சிமீட்சிக்கும் அயராது தீரத்தோடு பாடுபடும் இளைஞர்களை உருவாக்கித் தரும்.

தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு எனும் முக்கோணப் பீடமே இந்துமதக் கருவறை, கருவூலம், உலைக்கூடம், நாற்றங்கால், விதைப்பண்ணை, பிறப்பிடம், இருப்பிடம், பாசறை, பாடிவீடு, … என்ற பேருண்மையை உலகெங்கும் உள்ள இந்துக்கள் தெரிய, அறிய, ஆராய, புரிய, தெளிய, உணரத் தேவையான அனைத்து விதமான வசதி வாய்ப்புக்களையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும், ஏந்துகளையும், ஏதுக்களையும், தோதுக்களையும் வாரி வழங்குவதே சித்தரடியான்களாக, சித்தரடியாள்களாக, சித்தரடியார்களாக, சித்தர் நெறி ஆர்வலர்களாக, சித்தர் நெறி ஆதரவாளர்களாக இருப்பவரின் கடமை! கடமை!! கடமை!!!.... இக் கடமை சிறப்பாக நிறைவேற்றப் படுவதைப் பொறுத்துத்தான் இந்துமத மடமைகள், அறியாமைகள், புரியாமைகள், சுரண்டல்கள், ஆபாசங்கள், அநியாயங்கள், தவறுகள், குறைகள், கொடுமைகள், தீமைகள், … முதலிய அனைத்தும் தடுக்கப் படும், வேருடன் பிடுங்கி எடுக்கப் படும்.

i. இந்துமதத் தூய்மையே இந்துமத மறுமலர்ச்சி!
ii. இந்துமதத் தூய்மையே இந்துக்களை ஒற்றுமைப்படுத்தும்

(2013 July) 43,73,114 ஆடி மாத இதழ்

iii. இந்துமதத் தூய்மையே இந்துக்களை இந்துக்களாக்கும்.
iv. இந்துமதத் தூய்மையே மொழி, இனம், நாடு, மதம், சாதி, ... கடந்து இந்துமதத்தை ஆட்சி பெறச் செய்யும்.
v. இந்துமதத் தூய்மையே அனைத்து மதங்களும் இந்துமதத் தத்துவத்தின் சேய்கள் என்பதை மெய்ப்பிக்கும்.
vi. இந்துமதத் தூய்மையே மதப் போட்டிபொறுமைகளை ஒழிக்கும்.
vii. இந்துமதத் தூய்மையே 'மணீசர்களை மனிதர்களாக்கும் விஞ்ஞானமே மதம்' என்ற பேருண்மையை விளக்கும்.
viii. இந்துமதத் தூய்மையே 'மனிதகுல நல்லுயர்விற்கு மருந்தும் விருந்தும் மதமே' என்ற சித்தர் தத்துவத்தை நிலைநாட்டும்.
ix. இந்துமதத் தூய்மையே இந்திய நாட்டை ஒற்றுமைப்படுத்தி வளமும் வலிவும் பெறச் செய்யும்.
x. இந்துமதத் தூய்மையே விரோதங்களையும், துரோகங்களையும் விலக்கிடும்.
xi. இந்துமதத் தூய்மையே சுரண்டல்காரச் சூழ்ச்சிகளையும், சர்வாதிகாரங்களையும் நிலையாக அழித்தொழிக்கும்.
xii. இந்துமதத் தூய்மையே 'இந்துமதம் ஒரு சமுதாய அரசியல் விஞ்ஞானம்' என்ற பேருண்மையைப் புரியவைக்கும்.
xiii. இந்துமதத் தூய்மையே குடும்பத்துக்கோர் இளைஞரை இந்துமத வளவளர்ச்சிக்காக வழங்கச் செய்யும்.

இப்படி எண்ணற்ற முழக்கங்களை வழங்கிக் கொண்டே போகலாம். முதலில் இந்துமதத்தின் பெற்றோரான தமிழர்கள் இந்துமத மறுமலர்ச்சிப் பணிக்காகப் பொருளும் ஆளும் தாராளமாகக் கொடுத்துதவிட முன்வர வேண்டும். தமிழர்கள் மொழிப்பற்று, இன ஒற்றுமை, நாட்டுணர்வு என்ற விழிப்போடும், பக்குவத்தோடும், உயிர்த் துடிப்போடும் செயல்பட முன்வந்தால்தான் இந்துமதத்தைக் காப்பாற்ற முடியும். இதற்காக மதம், மொழி, சாதி, வட்டாரம், பணம், பதவி, புகழ், ... என்ற குறுகிய வெறியுணர்வு இல்லாமல் தமிழர்கள் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் இணைய வேண்டும் என்ற வேண்டுகோளையே எமது பிறந்த நாள் செய்தியாக விடுக்கிறோம் யாம்.

அன்பு

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்**

**//உண்மை நகல்// //மூலநகல்: சித்தரடியார் ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# எங்களின் உரை

சித்தர் நெறி என்று வழங்கப்படும் இந்த மாத இதழ் அனைத்துத் தமிழர்களையும் குருதேவர் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக்களைப் படித்து அறியும் வாய்ப்பினை நல்குவதற்காக 2010ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் துவங்கப் பட்டது. இதன் நோக்கம் குருதேவர் அவர்களின் எழுத்துக்களை அப்படியே வெளியிடுவது.

பொழுதுபோக்குப் புத்தகங்களை மட்டுமே படித்துக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு ஓரளவாவது ஆழ்ந்த சிந்தனைகளைத் தட்டி எழுப்பும் கட்டுரைகளை வழங்கிப் படிக்கத் தூண்டும் முயற்சி எள்முனை அளவே வெற்றி பெற்றுள்ளது. இனி வரும் காலத்திலாவது இந்த நிலை மாற வேண்டும் என்று விரும்புகின்றோம்.


## இந்து இலக்கியக் கழகத்தின் பிற வெளியீடுகளையும் வாங்கிப் படியுங்கள்.

| | | |
|---|---|---|
| 1) | மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழி | ரூ.108/- |
| 2) | இந்துவேதம் தரும் பூசைமொழி, பூசைமுறைகள் | ரூ. 5/- |
| 3) | எந்த மானுடம் இந்த மானுடம் | ரூ.18/- |
| 4) | சிந்திக்கலாமா? | ரூ.36/- |
| 5) | இருக்கு வேதத்தில் பெருமால் காயந்திரிகள் | ரூ.50/- |

## இவ்வெளியீடுகள் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

1) சித்தரடியான் திரு கார்த்திக் சிவராமன், கிழக்கு தாம்பரம், சென்னை, 9972130609
2) சித்தரடியான் திரு வீரபாண்டி, மதுரை, 9994983391
3) சித்தரடியான் திரு சங்கிலி கருப்பசாமி, திருச்சுழி 9655017508
4) சித்தரடியான் திரு மோகனரங்கம், திருவொற்றியூர், சென்னை 9840670874
5) சித்தரடியான் திரு சந்திரன், புன்னப்பாக்கம், வெங்கல், 9943670235
6) சித்தரடியார் திரு இரமணு, ஆரணி, 9629450166



**11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார். இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசான பிற்காலச் சோழப்பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார்.**

**இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.**

**சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் குருதேவர் அமைத்த சித்தர் கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.**



Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar and the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்) Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609
Printed at Kavin Printers, Madurai

**www.gurudevar.org Email: indhuism@gmail.com**